# யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், அச்சுவேலி.

# பரிசில் தினம் – 2012

காலம் :- 05.01.2012 சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் 1.00 மணி
இடம் :- வித்தியாலய பிரதான மண்டபம்

## தலைவர்

திரு. சு. மோகனராஜன்
(பாடசாலை முதல்வர்)

## பிரதம விருந்தினர்

திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்.)

## சிறப்பு விருந்தினர்கள்

திரு. இ. ஐங்கரன் அவர்கள்
(வலி கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர்,
வலி கிழக்கு கோப்பாய் பிரதேச ஈழமக்கள் ஜனநாயக்கட்சி இணைப்பாளர்.)

திரு. சி. சிவதர்சன் அவர்கள்
(பொது சுகாதாரப் பரிசோதகர் - அச்சுவேலி.)

திரு. க. சந்திரபோஸ் அவர்கள்
(வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினர். )

## கௌரவ விருந்தினர்கள்

திரு. செ. விசாகரத்தினம் அவர்கள்
(அமெரிக்கா, ஓய்வுபெற்ற தபாலதிபர், இலங்கை.)

திரு. தா. சிவலிங்கம் அவர்கள்
(பழைய மாணவன், பத்தமேனி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர்.)

## மகுடவாசகம்

" வாழக் கல் மின் "

## தூர நோக்கு ( VISION )

" ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் "

## பணிக் கூற்று ( MISSION )

எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகவும், நற்பழக்க வழக்கங்கள் உடையவர்களாகவும், நாட்டுப்பற்றுக் கொண்டவர்களாகவும், தலைமைத்துப் பண்பு கொண்டவர்களாகவும், பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றக் கூடியவர்களாகவும் ஆக்குவதுடன் பொருளாதாரபலம் கொண்டவர்களாகவும் வாழ வழிகாட்டுவதாகும்.

யா/பத்தமேனி

இரத்தினேஸ்வரி வித்தியாலயம்,

அச்சுவேலி.



# பரிசளிப்பு விழா - 2012

# அதிபர் அறிக்கை

05.01.2013

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவரல்
- மங்கள விளக்கேற்றல்
- கொடியேற்றம்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- பரிசளிப்பு
- விருந்தினர்கள் உரை
- கலைநிகழ்வு
- நன்றியுரை
- பாடசாலை கீதம்

# அதிபர் அறிக்கை 05.01.2013

எல்லாம் வல்ல மிட்டிலங்கூடல் விநாயகப் பெருமானையும், சங்கிலி வைரவப் பெருமானையும் வணங்கிப் பணிந்து 2012ஆம் வருட பரிசில் நாள் அறிக்கையை சமர்ப்பிக்க விளைகின்றேன்.

**"வாழக்கல்மின்"** எனும் மகுடவாசகத்தைத் தன்னகத்தே கொண்டு அச்சுவேலி பத்தமேனி கிராமத்தின் மத்தியில் இருந்து கல்விப்பணியாற்றி வரும் எமது பாடசாலை 2012ஆம் ஆண்டுக்கான பரிசில் நாளை தவிர்க்க முடியாத காரணத்தினால் காலம் தாழ்த்தி இன்றைய தினம் கொண்டாடுகின்றது.

இன்றைய பரிசில் நாளை சிறப்பிக்கவென வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர்களே, கௌரவ விருந்தினர்களே, ஆசி கூற வந்திருக்கும் குருமார்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த (உயர்தரம்) வரை யா/ வரணி மகாவித்தியாலயத்தில் கற்று தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றதோடு, பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார். தொடர்ந்து கல்விமுதுமாணி (M.Ed) பட்டத்தினைப் பெற்ற இவர், தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM) பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளார்.

1984ஆம் ஆண்டு கம்பகா மாவட்டத்தின் தாருகா ம.ம வித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற எமது பிரதம விருந்தினர் அவர்கள் இடம்மாற்றம் பெற்று யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். கடமையாற்றி வரும் காலத்தில் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்திலும், யா/அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் அதிபராக மிகச் சிறப்பாக சேவையாற்றி சமூகத்தினரால் மதிக்கப்பட்ட எமது பிரதம விருந்தினர் அவர்களின் திறமைகளையும், ஆளுமையையும் குறிப்பிட்ட சில பாடசாலைகள் அனுபவித்து வருவதை விடுத்து கோப்பாய் கோட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அனுபவிக்கக் கூடிய வண்ணம் 2010ஆம் ஆண்டில் இருந்து கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று இக்கோட்டத்தின் கல்வித்தரத்தை உயர்த்த கால நேரம் பாராது சேவையாற்றி வருகின்றார். தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III க்கு நியமனம் பெற்றுள்ள எமது கோட்டக் கல்விப் பணிப்பாளரை எமது பாடசாலைச் சமூகம் மனதார வாழ்த்துகின்றது. இத்தகைய அர்ப்பணிப்பு மிக்க கல்விப் பணியினை ஆற்றிவரும் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களை இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக அழைத்தமையையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து இவ் விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் திரு.இராமநாதன் ஐங்கரன் அவர்கள் யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியையும், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்று யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் தொழிற்கல்வியினையும் பெற்றுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகிழக்குக் கோப்பாய் பிரதேச இணைப்பாளராகவும், வலிகிழக்கு பிரதேச சபையின் எதிர்கட்சித்

தலைவராகவும் விளங்கும் இவர் இப்பிரதேச அபிவிருத்தியில் தன்வாழ்நாளை அர்ப்பணித்து சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே. கட்சி பேதத்துக்கு அப்பால் மனித நேயத்துடன் பணியாற்றும் இவர் இப்பிரதேச மக்களால் மதிக்கப்படுகின்ற பெருமகனாகவும் உள்ளார். எமது பாடசாலைக்கு பல தடவைகள் விஜயம் செய்து பௌதீக வள அபிவிருத்திக்கு அரும்பணியாற்றியுள்ளார். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் பாண்ட் வாத்தியக் கருவிகளை யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சில்வேந்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் கொள்வனவு செய்து தருவதற்கு உந்துசக்தியாக விளங்கியவர். அத்தோடு மிகப் பழமையான இவ்விழா மண்டபத்தை சேவாலங்கா நிறுவனத்தின் உதவியோடு புனரமைப்புச் செய்து தருவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார். இவர் இவ்விதம் எமது பாடசாலையின் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவரை இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக அழைப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பேருவகை அடைகின்றது. மேலும் இவர் பல உயர்வுகள் பெற்று இம்மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

அடுத்து இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் அச்சுவேலிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு.சிவனொளிபாதம் - சிவதர்சன் அவர்கள் வடமராட்சியின் புகழ்பூத்த பாடசாலையான யா /ஹாட்லிக் கல்லூரியில் உயிரியில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்றவர். 2010/2012 கல்வியாண்டில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பயிற்சி நிலையத்தின் பொதுச்சுகாதார பரிசோதகர் பயிற்சியில் முதல்தரத்தில் சித்தி பெற்று 2012ஆம் ஆண்டில் தனது முதல் நியமனத்தை அச்சுவேலிப் பிரதேசத்தில் ஏற்றுள்ளார். வலிகிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திற்கு உட்பட்ட ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தமது கடமையை மிகச் சிறப்பாக ஆற்றி வருகின்றார். இப்பிரதேசத்தின் பொது சுகாதாரத்தை சிறந்த முறையில் பேணி ஓர் ஆரோக்கியமான சமூகத்தை

உருவாக்குவதில் நேர காலம் பாராது மிக்க அர்ப்பணிப்புடன் இவர் சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இவரின் சேவை தொடர்ந்தும் எமது பிரதேசத்துக்கு கிடைக்க வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

அடுத்து இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்து இவ்விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.கதிர்காமு சந்திரபோஸ் அவர்கள் யா/கதிரிப்பாய் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும், யா/ அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியையும் பயின்று, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராக கடமையாற்றி 2008ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார். தன்னலம் கருதாத ஒரு சமூக சேவையாளராகத் திகழும் இவர் பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலைய போசகர், முன்னாள் அச்சுவேலி சிற்றூர்தி சேவைச்சங்க செயலாளர், பத்தமேனி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் பத்தமேனி சங்கிலி வைரவர் கோயில் செயலாளர், பத்தமேனி பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுச் சங்க தலைவர், பத்தமேனி விவசாய சம்மேளனத்தின் செயலாளர், பத்தமேனி வயோதிபர் சங்க செயலாளர், எமது பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர் என பல்வேறு பொது அமைப்புக்களில் பல பதவிகளை வகித்து வரும் இவர் 2011ஆம் ஆண்டு வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டார். தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிரதேச அபிவிருத்தியிலும் மக்கள் நலன்கருதியும் அர்ப்பணித்து சேவையாற்றி வரும் இவர்,எமது பாடசாலை அபிவிருத்தியிலும் தன்னால் முடிந்தவரையில் பணியாற்றி வருகின்றார். இவரை இன்றைய நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக அழைப்பதில் பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது. மக்கள் போற்றும் சேவையாளனாகத் திகழும் இவர் மேலும் பல பதவிகளைப் பெற்று இச் சமூகத்துக்கும், எமது பாடசாலைக்கும் சேவையாற்ற வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

அடுத்து கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவனும் சிறந்த சமூக சேவையாளருமான திரு.தாமோதரம்பிள்ளை சிவலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யா/சரஸ்வதி வித்தியாலயத்திலும் கற்று அச்சுவேலி கிராம சபையில் இறைவரி உத்தியோகத்தராக கடமையாற்றினார். பின்னர் தனது பதவியை இராஜிநாம செய்து விட்டு 1962-1966 வரை அச்சுவேலி கிராம சபை உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு கிராம அபிவிருத்தியில் தன்னாலான சேவையை ஆற்றியுள்ளார். சிறந்த சமூக சேவையாளராக இவர் யா/ அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்க உப தலைவராகவும், யா/புனித தெரேசாள் பெண்கள் கல்லூரியிளன் செயற்குழு உறுப்பினராகவும், இளைஞர் விவசாயக்கழக செயலாளராகவும், பத்தமேனி விநாயகர் சனசமூக நிலையத் தலைவராகவும், அச்சுவேலி ப.நோ.கூ.சங்க கிளைக்குழுத் தலைவராகவும், வலிவடக்கு ப.நோ.கூ.சங்க பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், 1972- 1976 வரை இணக்க சபை உறுப்பினராகவும், சமாதானசபை உறுப்பினராகவும், அச்சுவேலி வைத்தியசாலை உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகவும், நலன்புரிச் சங்க உறுப்பினராகவும், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் என பல்வேறு பதவிகளை வகித்து தனக்கென வாழாது வமூக அபிவிருத்தியையும், மக்கள் நலனையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்தார்.

தற்போது தனது முதுமைக்காலத்திலும் மிக்க துடிப்புடன் சமூக சேவையிலும், மக்கள் வாழ்வாதார மேம்பாட்டிலும் தன்னால் இயன்றவரை நேரம் காலம் பாராது சேவையாற்றி வருகின்றமையை இக் கிராம மக்கள் அறிவர். இடது சாரிக் கொள்கை கொண்ட இவர் தீண்டாமை ஒழிப்பு இயக்கம், சமசந்தி போசனம் போன்ற முற்போக்கு சிந்தனைகளை நிலைநாட்டுவதில்

தமது இளமைக்காலத்தில் பல போராட்டங்களை நடாத்தி மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றார்.

இத்தகைய முற்போக்குச் சிந்தனையாளர், சமூகசேவையாளர், எமது பாடசாலையின் பழைய மாணவன், தற்போதும் எமது பாடசாலை வளர்ச்சியில் எமக்கு பக்கபலமாக நிற்பவர் என்ற ரீதியில் இன்றைய நிகழ்வின் கௌரவ விருந்தினராக அவரை அழைப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமை அடைகின்றது. இவர் இன்னும் பல ஆண்டுகள் நோய், நொடிகள் இன்றி வாழ்ந்து எமது பாடசாலைக்கும், இக்கிராமத்துக்கும் சேவையாற்ற வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

அடுத்தாக இவ்விழாவுக்கு கௌரவ விருந்தினராக வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஓய்வுபெற்ற அஞ்சலதிபரும், தற்போது அமெரிக்காவில் வசித்து வருபவருமாகிய திரு.செல்லத்துரை விசாகரத்தினம் அவர் மனைவி திருமதி.செல்வநாயகி விசாகரத்தினம் என்போரை வருக வருக என வரவேற்கின்றேன். இவர் அச்சுவேலி வருணனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யா/அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்வி கற்று பின்னர் கொழும்பு GPO Parcel Office (Egn) அஞ்சல் அதிபராக கடமையாற்றி ஓய்வுக்காலத்துக்கு முன்னரே ஓய்வு பெற்று குடும்பமாக அமெரிக்கா சென்று குடியேறியுள்ளார்.

இவரின் ஒரே மகளான செல்வி.நிசாந் விசாகரத்தினம் அவர்கள் Medical Psychology இல் PHD பட்டம் பெற்றதோடு Bachelor of Science in Forensic and Biology, Master of Science in Chemistry, Master of Science in Criminal Justice போன்ற பட்டங்களை சிறுவயதிலேயே பெற்று தற்போது DOC Medical Follove Ship ஆக கடமையாற்றி வருகின்றார். தற்போது புற்று நோயைக் குணப்படுத்தும் மருந்து கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மருத்துவக்குழுவில் ஒருவராகவும் கடமையாற்றி வருகின்றார். இவ்விதம் தனது பிள்ளையின் கல்வி முன்னேற்றத்தில் எவ்வளவு ஈடுபாடு

கொண்டிருந்தாரோ, அதே போல் எமது கிராமப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டு அக்கறையாகச் செயற்படும் தங்களையும் தங்கள் பாரியாரையும் இவ்விழாவுக்கு கௌரவ விருந்தினராக அழைத்தமையையிட்டு எமது பாடசாலைச் சமூகம் அகமகிழ்வு அடைகின்றது.

## பாடசாலை வரலாறு

1930களுக்கு முன்னர் இக்கிராமத்தில் உள்ள சைவப் பிள்ளைகள் அனைவரும் அச்சுவேலியில் இயங்கிய கத்தோலிக்கப் பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தனர். 1931ஆம் ஆண்டு பிற்பகுதியில் இங்கு வாழ்ந்த இந்து மதத்தினருக்கும் , கத்தோலிக்க மதத்தினருக்கும் இடையே ஏற்பட்ட பூசல் காரணமாக இக் கிராமத்தில் உள்ள சைவப் பிள்ளைகள் பயில்வதற்கு ஒரு சைவப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டும் என இக் கிராம மக்கள் விருப்பம் கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் ஒரு பெருமகனாகவும் பேரறிஞராகவும் வாழ்ந்த சைவகப்பெரியார் ஸ்ரீமான் மாப்பாணபிள்ளை சுப்பிரமணியம் (அப்புக்காத்து) அவர்கள் பொருத்தமான காணி ஒன்றை உபகரித்து ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் பாடசாலைக்குகந்த கட்டடம் ஒன்றை நிறுவி அரச அனுமதியுடன் 15-02-1932 ஆம் ஆண்டு இரத்தினேஸ்வரி வித்தியாசாலை என்ற நாமத்துடன் இப்பாடசாலையை ஆரம்பித்தார். 1960ஆம் ஆண்டு அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் வரை இவரே இப்பாடசாலையின் முகாமையாளராக இருந்து மிகச் சிறப்பாக இப் பாடசாலையை முகாமை செய்து வந்தார். இப் பாடசாலையின் முதல் தலைமையாசிரியராக இருந்து கடமை புரிந்தவர் திரு.ச.கிருஸ்ணபிள்ளை என்பவராவார். இவர் மிகச் சமயப்பற்று உள்ளவராக இருந்தமையினால் கிராமம் முழுவதும் சைவமணம் கமழத் தொடங்கியது. பாடசாலை வளர்ச்சியில் இவரின் பணி அளவிடற்கரியது.

ஆரம்பத்தில் ஆரம்பப் பாடசாலையாக தொடங்கப்பட்ட இப்பாடசாலை 1986ஆம் ஆண்டு 08ம் வகுப்பு வரையான பாடசாலையாகவும் 2002ஆம்

ஆண்டு தரம்09 ம் வகுப்பு வரையான பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டது.

## புகழ் பூத்த அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.ச.கிருஸ்ணபிள்ளை | (1932 - 1960) |
| 2. | திரு. சி. மயில்வாகனம் | (1960 - 1965) |
| 3. | திரு.க.பொன்னம்பலம் | (1965 - 1972) |
| 4. | திரு.ரி.வேலுப்பிள்ளை | (1972 - 1978) |
| 5. | திரு. எஸ். முத்துக்குமாரசாமி | (1978 - 1982) |
| 6. | திரு.சி.சுந்தரலிங்கம் | (1982 - 1996) |
| 7. | திரு.சி.மகேஸ்வரதாசன் | (1996 - 2002) |
| 8. | திரு.சி.மாணிக்கவாசகர் | (2002 - 2007) |
| 9. | திரு.சு.மோகனராஜன் | (2007 - இன்றுவரை) |

## மாணவர்கள்

தரம் 01 தொடக்கம் 09 வரையான வகுப்புக்களைக் கொண்ட இப் பாடசாலையில் 82 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

பெரும்பாலும் கூலித்தொழிலையே வருமானமாகக் கொண்டிருக்கும் பெற்றோரின் பிள்ளைகளே இங்கு கல்வி கற்கின்றனர். இந் நிலை மாணவர்களின் கல்வியிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. திட்டமிடும் கல்விச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பெற்றோரின் நிலை மிகவும் தாக்கம் செலுத்துவதால் திட்டமிடும் இலக்கையடைவதில் பிரச்சனையை எதிர்நோக்கும் நிலை காணப்படுகின்றது. பாடசாலை நேரத்துக்கு அப்பால் மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தப் பெற்றோர் தவறிவிடும் நிலை மாணவர் அடைவுமட்டத்தை உயர்த்துவதில் தாக்கம் செலுத்துகின்றது.

மேலும் மாணவர் தொகை காலத்துக்குக் காலம் குவைடைந்து வருவது இப்பாடசாலையின் இயங்கு நிலையைத் தக்க வைப்பதில் பெரும்

சவாலாக உள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலை நோக்கி நகர்த்திச் செல்வது இங்குள்ள பெரிய பாடசாலைகள் எமது பாடசாலைகள் போன்ற கிராமப் புற பாடசாலைகளை அண்டிய சுற்றயற் பிள்ளைகளையும் வகைதொகையின்றி உள்வாங்கிக் கொள்வது மற்றும் சமூகரீதியான ஏற்றத்தாழ்வுகள் போன்ற பல்வேறு காரணங்களால் இப் பாடசாலையின் மாணவர் தொகை காலத்துக்குக் காலம் குறைவடைந்து செல்கின்றது. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இக் கிராமத்தலைவர்களால் எடுக்கப்பட்டும்கூட எதிர்பார்க்கப்பட்ட வெற்றி கிடைக்கவில்லை. இந்நிலை தொடருமானால் இப் பாடசாலையின் எதிர்காலம் சவால் நிறைந்ததொன்றாக அமையக் கூடும் என்பதில் ஐயமில்லை. எனவே அன்பார்ந்த பெற்றோர்களே! புழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! ஒரு பாடசாலை மூடப்படுவதென்பது ஆயிரம் சிறைச்சாலைகள் ஆரம்பமாவதற்கு சமமானது. இதை தாங்கள் அறவீர்கள் இத்தகைய ஒரு வரலாற்றுத் தவறை செய்த பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இப் பாடசாலையின் இருப்பை தக்க வைப்பீர்கள் என நம்புகின்றேன். உங்கள் கரங்களை இறுகப் பற்றுகின்றேன்.

## சமர்ப்பணம்

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்குழாம் உறுப்பினர் திரு.குணரட்ணம் சரவணேஸ்வர்(B.Sc)அவர்கள்21-10-2012இல் அகாலமரணமாகியுள்ளார். அன்னாரின் மறைவு எமது பாடசாலை சமூகத்துக்கு பேரிழப்பாகும். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்துக்கு எமது பாடசாலை சமூக சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இடமாற்றம் பெற்றோர்

எமது வித்தியாலயத்தில் இருந்து கடந்த வருடத்தில் திருமதி.உமா அருட்குமரன் (விஞ்ஞானப் பயிற்சி) திரு.இ.சுபீஸ்கரன் (B.Sc) போன்றோர் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் பணி சென்ற பாடசாலைகளிலும் சிறக்க மனமார வாழ்த்துகின்றேன்.

## புதிதாக வருகை தந்தோர்

திருமதி.சுமைலியா சத்தியதாசன் (National Diploma in Teaching Music) திரு.இராசரத்தினம் சரவணபவன் (National Diploma in Teaching Design and Technology) என்போர் நிரந்தர இடமாற்றம் பெற்று எமது பாடசாலைக்கு வருகை தந்துள்ளார்கள் அவர்களை வருக வருகவென வரவேற்றுக் கொள்கின்றேன்.

## வாழ்த்துக்கள்

எமது வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி.சாந்தினி விஜவரதன் அவர்கள் கடந்த வருடம் தேசிய கல்வி நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் கல்விமாணி (B.Ed) பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். அவருக்கு எமது பாடசாலை சமூகம் சார்பான பாராட்டுக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதோடு அவர் கல்வி புலத்தில் மேலும் பல பட்டங்களைப் பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மேலும் எமது வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் தம்மால் முடிந்தவரை தன்னலமற்ற சேவையை வழங்கி வருகின்றனர். இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என பிராத்திப்பதோடு, எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு வரும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

## முகாமைத்துவக் குழு

எமது முகாமைத்துவக் குழு பாடசாலையின் செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றி வருகின்றது. மூத்த அனுபவம் வாய்ந்த உப அதிபர் உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழு கல்வி அபிவிருத்தி, பௌதீகவள மற்றும் இணைபாடவிதான அபிவிருத்தி,

பாடசாலைத்தர மேம்பாடு போன்ற விடயங்களை சிறந்த முறையில் அமுல்படுத்தி வருகின்றது.

பாடசாலையில் திட்டமிட்டு நிறைவேற்றப்படும் சகல செயற்பாடுகளுக்கும் தோள் கொடுத்து நிற்கும் முகாமைத்துவ குழுவின் பணி மறக்கற்பாலது. திருமதி.வசந்தாதேவி சண்முகநாதன் (உப அதிபர்) திருமதி. சாந்தினி விஜவரதன், திருமதி.தவமணிதேவி சுவாமிநாதன், திருமதி.கோணேஸ்வரி மதிவர்ணன், திரு.சின்னத்துரை கங்காதரன் போன்றோர் ஒதுக்கிய பணிகளை நேரகாலம் பாராது செவ்வனே ஆற்றி பாடசாலை வளர்ச்சிக்காக பேருதவி புரிகின்றனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதோடு ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஆசிரியர்கள்

எமது பாடசாலையில் தற்போது அதிபர் உட்பட 09 நிரந்தர ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இது பாடசாலையின் ஆசிரிய ஆளணிச் சுற்று நிருபத்துக்கு சம்மப்படுத்தப்பட்டபோதும் பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை. கணிதம், ஆங்கிலம், வரலாறு, ஆரம்பக்கல்வி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரை 5 வகுப்புகளுக்கு 3 ஆசிரியர்களே உள்ளமையால் இரண்டு வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலேயே கற்பித்து வருகின்றனர். எனவே எதிர்வரும் காலத்தில் எமக்கு பொருத்தமான ஆசிரியர்களை நியமித்து உதவுமாறு தயவாக வேண்டிக் கொள்கின்றேன்.

## எமது ஆசிரியர் குழாம் விபரம்

1 திரு.சுப்பையா மோகனராஜன் (Principal)
B.A HONS (ECON)PGDE, M.Ed,SLPS -2 –II

2 திருமதி.வசந்தாதேவி சண்முகநாதன் (Vice Principal)
(SLTS -2-I, Primary Trd)

3 திருமதி.கோணேஸ்வரி மதிவர்ணன்
(SI TS -2-I, Science Trd)

4 திருமதி.சாந்தி னி விஜவரதன்
(SLTS – 2-I, B.Ed, Primary Trd)

5 திருமதி.தவமணிதேவி சுவாமிநாதன்
(SLTS -1, E.A, PGDE)

6 திருமதி.செல்வமணி செல்லத்துரை
(SLTS -2- I, Music Trd)

7 திரு. சின்னத்துரை கங்காதரன்
(SLTS – 2 –II, Primary Trd)

8 திருமதி.சுமைலியா சத்தியதாசன்
(SLTS – 3- I, National Dip.in Teaching Music)

9 திரு.இராசரத்தினம் சரவனபவன்
(SLTS – 3- I, National Dip.in Teaching Design and Technology)

10 திருமதி துளசிகா வேந்தன் (G.C.E A/L, Part time English)

## கல்விச் செயற்பாடுகள்

நேரசூசிக்கும் மேலதிகமாக HOP செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன.

பலதரப்பட்ட வளவாளர்களின் உதவியுடன் மாணவர்கள், ஆசிரியர்களின் உயர்மட்ட கல்விச் செயற்பாட்டு விருத்திக்காகப் பல செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாணவர் நலன்கருதி பொருத்தமான வளவாளர்கள் ஏற்பாடு செய்யப்பட்டு செயற்திட்டங்கள் சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றது. இதற்கான முன்மொழிவுகள் அனுமதி பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் எமது பாடசாலையில் இனம்காணப்பட்ட மாணவர்களுக்கான ALP செயற்பாடும் சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் பல ஆசிரியர்கள் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றமையையும் குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான பல்வேறு செயற்பாடுகள் காரணமாக இவ் வருடம் தரம் 09 மாகாண மட்டப் பொதுப் பரீட்சையில் முக்கியமான பாடங்களான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு போன்ற பாடங்களின் அடைவு மட்ட வீதம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வினைக் காட்டியுள்ளது. இந்தவகையில் இவ் வகுப்பிற்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பெறுபேறுகள்

மாகாண மட்ட பொதுப் பரீட்சை - 2012

| | |
|---|---|
| தமிழ் | 46% |
| கணிதம் | 37% |
| சைவசமயம் | 55% |
| புவியியல் | 64% |
| குடியுரிமைக்கல்வி | 64% |
| சுகாதாரமும் உடற் கல்வியும் | 64% |
| சங்கீதம் | 91% |
| வரலாறு | 82% |
| ஆங்கிலம் | 37% |
| விஞ்ஞானம் | 57% |

பெற்று சிறப்பாகச் சித்தியடைந்துள்ளனர். தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 04 மாணவர்கள் தோற்றி 01 மாணவன் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார். 2013ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்களைத் தன்னும் சித்தியடைய வைக்கவேண்டும் என்ற இலக்கோடு தற்போது இருந்தே விசேட செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

## இணைபாடவிதான செயற்பாடுகள்

மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்தும் இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டிகள, வெளிநிலைப் போட்டிகள், மன்றச் செயற்பாடுகள் யாவும் மிகச் சிறப்பாக திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## உணவு மற்றும் பால் விநியோகச் செயற்திட்டம்

எமது வித்தியாலத்தில் சகல மாணவர்களுக்கும் பால் மற்றும் போசாக்குணவுச் செயற்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்த மதிய உணவுடன் கிழமைக்கு இரண்டு முட்டையும், தகரத்தில் அடைக்கப்பட்ட மீனும் வழுங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இச் செயற்திட்டத்தை சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு எமது ஆசிரியர்களான திரு.சி.கங்காதரன், திருமதி.வி.சாந்தினி, திருமதி.செ.செல்லத்துரை, திருமதி.த.சுவாமிநாதன் போன்றோரின் அர்ப்பணிப்பு மிக்க சேவை பாராட்டப்பட வேண்டியது. இவர்களோடு எமது சமையல் தொண்டர்களான திரு.க.மகாலிங்கம், திருமதி.எஸ்.சுமதினி என்போருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெற்றோர்களே! இன்றைய நாளில் பெற்றோராகிய உங்களிற்கும் சில விடயங்களைக் கூறவேண்டியவனாகவுள்ளேன்.

1. உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்
2. உங்கள் பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக பாடசாலையுடன் பாடசாலையுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுங்கள்

3. பாடசாலைக்கு அழைக்கப்படும் வேளைகளில் பிறவேலைகளைப் புறந்தள்ளி பிள்ளைகளின் நலனுக்காக தவறாது பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு சமூகம் கொடுங்கள்.

4. பிள்ளைகளின் உடற்சுத்தத்தின் மீதும், நேர்த்தியாக சீருடை அணிவதிலும் கவனம் செலுத்துங்கள்.

5. பிள்ளைகளின் பிரச்சனைகளையும் தேவைகளையும் அக்கறையுடன் செவிசாய்த்து ஆவன செய்யுங்கள்.

6. மாணவர்கள் தவறாது தினமும் பாடசாலைக்குச் சமூகமளிப்பதை உறுதிப்படுத்துங்கள்.

7. பிள்ளைகள் வீடுகளில் கற்கும் வேளைகளில் அவர்கள் அருகிலிருந்து ஊக்கப்படுத்துங்கள்.

8. பிள்ளைகள்வீடுகளில் கற்கும் வேளைகளில் இயன்றவரைக்கும் அமைதியைப் பேணுங்கள்.

9. பிள்ளைகள் தமது சமவயதுக்குழுக்கள் தவிர்ந்த ஏனைய வயதுப் பிள்ளைகளுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

10. பிள்ளைகளிடத்தே சமய நம்பிக்கையை ஊக்குவித்து ஒழுக்கத்தையும் விழுமியத்தையும் பேணுவதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குங்கள்.

## பாடசாலைக்கு உதவி புரிந்தோர்

- பாடசாலையின் வடக்குப் புற வேலியை நிரந்தர மதிலாக அமைக்க ரூபா 300000.00 (மூன்று இலட்சம்) நிதியுதவி வழங்கிய கனடா நலன்புரிக் கழகத்தினருக்கு குறிப்பாக பத்தமேனியைச் சேர்ந்த திரு.உருத்திரன், திரு.நாதன், திரு.ஜெயமோகன் என்போருக்கும் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திரு.யோகநாதன் என்பவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- பாடசாலையின் அலுவலகத் தேவைக்கென கணினித் தொகுதி ஒன்றை அன்பளிப்புச் செய்துதவிய கனடாவைச் சேர்ந்த திரு.பவானந்தன் - வரதராஜா என்பவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ஜேர்மனியில் இருந்து வருகை தந்த பத்தைமேனி வைரவர் கோயிலடியைச் சேரந்த திரு.எஸ்.சபீஸ்கரன் தனது தாயாரின் நினைவாக 32"LCD TV ஒன்றும், DVD Player ஒன்றும் அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- EKSP திட்டத்தின் கீழ் ஐந்து கணினித் தொகுதிகளையும் அதற்கான தளபாடங்களையும் இரண்டு பிரிண்டர்களையும் பெற்றுத் தந்ததோடு அவற்றை வைப்பதற்கான அறையையும் அமைப்பதற்கு நிதியினை ஒதுக்கி உதவிய எமது வலயக்கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் எமது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் ரூபா 50000.00 பெறுமதியான மேலைத்தேய பாண்ட் வாத்தியக் கருவிகளை கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். அந்த வகையில் அவருக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த வலிகிழக்கு பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு.இ.ஐங்கரன் எதிர்கட்சி உறுப்பினர் திரு.க.சந்திரபோஸ் போன்றவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இன்றைய பரிசில் நாளை சிறப்புற நடாத்துவதற்கு ரூபா 30500.00 நிதியுதவி புரிந்த கனடாவில் வாழும் பத்தமேனியைச் சேர்ந்த திரு.நாதன், திரு.உருத்திரன் அவர்களுக்கும் அவர்களுடன்

தொடர்பினை ஏற்படுத்தி இவ் நிதியைப் பெற்றுத் தந்த திரு.கிருபானந்தராஜா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- எமது பாடசாலை பழைய மாணவியும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான திருமதி.க.கண்மணி அவர்கள் ரூபா 10000.00 நிதியுதவி அளித்துள்ளார். அவருக்கும் நிதியுதவி வழங்கிய ஏனையோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## குறிப்பிடக் கூடிய தேவைகளாவன

- மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையிலும் கணினி அறிவை மேம்படுத்தும் வகையிலும் எம்மிடம் உள்ள 500 இற்கு மேற்பட்ட நூல்களையும், கணினிகளையும் மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடக்கூடிய வகையில் கட்டடம் ஒன்று இல்லை. எனவே எமக்கு அவசியமாக 40'X 20' அளவு கொண்ட கட்டடம் ஒன்று தேவையாகவுள்ளது.

- 1932ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ள இப் பிரதான மண்டபம் சுவர்கள் உருக்குலைந்தும் நிலமானது மாணவர்கள் கதிரை, மேசை வைத்து படிக்க முடியாத அளவுக்கு உடைந்தும், கூரையானது உருக்குலைந்து மழைக்காலத்தில் மாணவர்கள் இருக்க முடியாத அளவுக்கு ஒழுக்குடையதாகவும் காணப்படுகின்றது. எனவே விரிந்த 100'X 20' அளவு கொண்ட கட்டடத்தை முற்றாகத் திருத்தி தருமாறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

- மாணவர்களின் கற்றல் தேவைக்காகவும் அலுவலகத் தேவைக்காகவும் போட்டோக் கொப்பி இயந்திரம் ஒன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது. போட்டோ கொப்பி எடுப்பதற்கென பெருமளவு நிதியை செலவு செய்ய

வேண்டியுள்ளது. எனவே வெளிநாடுகளில் உள்ள நலன் விரும்பிகள் மனமுவந்து ஒரு போட்டோ கொப்பி இயந்திரத்தை வழங்கியுதவுமாறு தயவாக வேண்டிக் கொள்கின்றேன்.

❖ காலைப்பிராத்தனை, வெள்ளிக்கிழமை ஆராதனை பாடசாலை விழாக்கள் என்பவற்றை சிறப்பான முறையில் நடாத்துவதற்கு ஒலி பெருக்கித் தொகுதி ஒன்று அவசியம் தேவையாக உள்ளது. இதனைப் பெற்றுத் தர சமூக நலன்விரும்பிகள் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

❖ தற்போது இருக்கும் அதிபர் அலுவலகம் போதுமான இடவசதியற்றுக் காணப்படுகின்றது20'X 10' அளவு கொண்டதாக இருக்கும் அலுவலகத்தை 20'X 20' அளவு கொண்டதாக அமைத்துத் தருமாறு வேண்டுகின்றேன்.

❖ பாடசாலையின் முகப்புப் பெயர் வளைவு பார்ப்பதற்கு அழகற்று உள்ளது. அதனை அழகான சில்வர் எழுத்துக்களால் வடிவமைத்து நிர்மானித்துத் தருமாறு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் சமூக நலன்விரும்பிகளை கேட்டுக் கொள்கின்றேன்.

❖ கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கும் மாணவர்களுக்குப் பல்வேறு விளக்கங்களினூடான கற்பித்தலை மேற்கொள்வதற்கும் பல்லூடக கருவி (Multi Media) தேவையாக உள்ளது. அதனையும் பெற்றுத் தருமாறு வேண்டுகின்றேன்.

❖ எமது பாடசாலைக்கு திறந்தவெளி அரங்கு ஒன்றை அமைத்துத்தருமாறு சமூக நலன் விரும்பிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

## நன்றிகள்

**"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொண்ட மகர்க்கு"**

பாடசாலையின் வளர்ச்சியின் பால் என்னுடன் பக்கபலமாக இருக்கும் முகாமைத்துவக்குழு மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், புலம் பெயர் நாடுகளில் வாழும் நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் இன்றைய பரிசில் நாளை சிறப்பிக்கவென வருகை தந்துள்ள பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், ஆசி கூறிய குருமார்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இறுதியாக இவ்விழா மலரினை சிறப்பாக அச்சிட்டு உதவிய ஸ்ரீ கண்ணகி அச்சகத்தினருக்கும் இவ்விழாவுக்கான ஒலி பெருக்கி வசதியை சிறப்புற ஒழுங்கமைத்த பத்தமேனி றஞ்சன் சவுண்ட் ஸ்தாபனத்தினருக்கும் மற்றும் இவ் விழாவுக்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்ட பழைய மாணவர்கள் சமையல் தொண்டர்களுக்கும் நன்றி கூறுவதுடன் ஒட்டு மொத்தமாக இவ்விழா சிறப்புற அமைய ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறி எனது நன்றியுரையை நிறைவு செய்கின்றேன்.

**. நன்றி**

**-அதிபர்-**

# பரிசு பெறுவோர் விபரம் - 2012

### தரம் :- 01

| | |
|---|---|
| 01. செல்வன்.கா.தருண் | பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், வாய்மொழி ஆங்கிலம், பேச்சு, வாசிப்பு, அழகியல், கைவேலை. |
| 02. செல்வன்.ஜெ.ஜென்சிகன் | பொதுத்திறமை 2ம் இடம் |
| 03. செல்வன்.த.தனுசன் | பொதுத்திறமை 3ம் இடம் |
| 04. செல்வன்.க.அஜித் | |
| 05. செல்வி.ஜெ.டேனுஜா | |
| 06. செல்வி.த.தனுசிகா | |
| 07. செல்வன்.ச.டினோஜன் | |
| 08. செல்வன்.ம.தனுசன் | |

### தரம் :- 02

| | |
|---|---|
| 01. செல்வன்.வி.விதுஷன் | பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பேச்சு, வாசிப்பு, அழகியல், கைவேலை. |
| 02. செல்வன்.ஜெ.கஜந்தன் | பொதுத்திறமை 2ம் இடம் |
| 03. செல்வி.நி.நிலக்சனா | பொதுத்திறமை 3ம் இடம் |

### தரம் :- 03

| | |
|---|---|
| 01. செல்வி.ஜெ.சர்மிஜா | பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பேச்சு, வாசிப்பு, அழகியல், கைவேலை. |
| 02. செல்வி.ஜெ.ஜென்சிகா | பொதுத்திறமை 2ம் இடம் |
| 03. செல்வன்.க.விகுந்தன் | பொதுத்திறமை 3ம் இடம் |

### தரம் :- 04

| | |
|---|---|
| 01. செல்வன்.இ.தபாங்கன் | பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பேச்சு, வாசிப்பு, அழகியல், கைவேலை. |

02. செல்வன்.சு.கார்த்தீபன் — பொதுத்திறமை 2ம் இடம்
03. செல்வன்.வி.வின்சன் — பொதுத்திறமை 3ம் இடம்

**தரம் :- 05**

01. செல்வன்.அ.யதுசாந் — பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பேச்சு, வாசிப்பு, அழகியல், கைவேலை.
02. செல்வி.த.கார்த்திகா — பொதுத்திறமை 2ம் இடம்
03. செல்வன்.த.கஜீபன் — பொதுத்திறமை 3ம் இடம்

**தரம் :- 06**

01. செல்வி.ர.டிலானி — பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், சமயம் சங்கீதம், தொழிநுட்பத்திறன்.
02. செல்வி.த.தனுஷா — பொதுத்திறமை 2ம் இடம், தமிழ், வரலாறு, விஞ்ஞானம்,ஆங்கிலம், சுகாதாரம், குடியுரிமைக் கல்வி
03. செல்வி.சி.சுகன்யா — பொதுத்திறமை 3ம் இடம், புவியியல்

**தரம் :- 07**

01. செல்வன்.தெ.சஞ்சீவன் — பொதுத் திறமை 1ம் இடம், சமயம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரம், வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி, தொழில்நுட்பத்திறன்.
02. செல்வன்.த.தனுஷ்ரன் — பொதுத்திறமை 2ம் இடம்
03. செல்வன்.இ.அபிதாஸ் — பொதுத்திறமை 3ம் இடம், கணிதம்

**தரம் :- 08**

01. செல்வி.பூ.தர்சனா — பொதுத் திறமை 1ம் இடம், சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், சங்கீதம், தொழில்நுட்பத்திறன்
02. செல்வி.அ.நிதூசனா — பொதுத்திறமை 2ம் இடம், சமயம்,வரலாறு,

| | |
|---|---|
| | ஆங்கிலம், புவியியல், குடியுரிமைக் கல்வி |
| 03. செல்வி.அ.சஞ்சிகா | பொதுத்திறமை 3ம் இடம் |

**தரம் :- 09**

| | |
|---|---|
| 01. செல்வி.ச.சரண்யா | பொதுத் திறமை 1ம் இடம், கணிதம், தமிழ், சமயம், சுகாதாரம், சங்கீதம்,விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, தொழில்நுட்பத்திறன் |
| 02. செல்வன்.ஜெ.டிதூசன் | பொதுத்திறமை 2ம் இடம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் |
| 03. செல்வி.ஜெ.துஷானா | பொதுத்திறமை 3ம் இடம் |
| 04. செல்வி.க.விதுஷா | பொதுத்திறமை 3ம் இடம் |

**சிறந்த மாணவன்/ மாணவி**

01. செல்வன்.ஜெ.டிதூசன் 02. செல்வி.ச.சரண்யா

**சூழல் சுத்தம் பேணுதல்**

01. செல்வி.க.விதுஷா 03. செல்வி. .சங்கீதா
02. செல்வி.க.தர்சிகா 04. செல்வன்.அ.டிசாந்

**வரவு ஒழுங்கு**

01. செல்வி.ப.கஸ்தூரி

**பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட சிறுவர் தினவிழா**

01. செல்வன். அமிர்த்தலிங்கம் யதுசாந் - கவிதை 1ம் இடம்

**கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டி - 2012**

01. செல்வி.அன்னலிங்கம் சஞ்சிகா - உயரம் பாய்தல் 2ம் இடம்

**கோட்டமட்ட தமிழ்தினப் போட்டி - 2012**

01. கிராமியப் பாடல் (குழு நிகழ்ச்சி) - 2ம் இடம்

**வலயமட்ட தமிழ்தினப் போட்டி - 2012**

01. கிராமியப் பாடல் (குழு நிகழ்ச்சி) - 3ம் இடம்

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் மளந்திடும்
வன்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானமறிந்த தனைத்தும் மறிந்து
வளர் மொழி வாழியவே!

-மகாகவி. சுப்பிரமணிய பாரதியார்-

# கல்லூரிக் கீதம்

வாழிய வாழிய வாழியவே
எம் கலைக்கூடம் எஞ்ஞான்றும் வாழியவே
(வாழிய வாழியவே....)

பத்தமேனி என்னும் பழம் பெரும் பதியில்
மத்தியில் ஒளிவிடும் மணி விளக்கெனவே
சித்தம் மிக மகிழ்ந்து சிறுவர் சிறுமியர்கள்
விந்தை பல பயின்று விளங்கி திகழ்ந்திடவே
(வாழிய வாழியவே....)

இரத்தினேஸ்வரி எனும் அரும் பெயர் சூடி
பரத்தினில் உயர்ந்த பரசிவ நெறியை
சிரத்தை அன்புடனே சிறார்களின் உள்ளத்தில்
அருந்தி இவ் அவனியில் அரும்சேவை ஆற்றிட
(வாழிய வாழியவே....)

செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புடன் கணிதம்
விந்தை பல பயின்று விஞ்ஞானம் தன்னொடு
சமூகத் துறையும் அழகியற் துறையும்
ஒருங்கே இணைந்து ஒன்றாக ஓங்கிட
(வாழிய வாழியவே....)

Printed By :- Sri Kamaakshi Printers, Atchuvely. 077 7392935